செ.வெ.எண்: 56/மே நாள் : 31.05.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## 2016 - 2017 நிதியாண்டின் வருடாந்திர கடன் வரைவு திட்டத்தின்படி மொத்தம் ரூ.3149.58 கோடி இலக்கு நிர்ணையிக்கப்பட்டுள்ளது

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (31.05.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், வங்கியாளர்களுடனான மாதாந்திர ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்திற்கான 2016 - 2017 நிதியாண்டின் வருடாந்திர கடன் வரைவு திட்டத்தினை வெளியிட்டார்.

வெளியிடப்பட்ட வருடாந்திர கடன் திட்ட வரைவின்படி, வேளாண்மைப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து அதிக அளவிலான வேளாண் கடன் உதவிகள் வழங்கிட ஏதுவாக ரூ.2139.69 கோடியும், சிறு,குறு மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சிக்காக ரூ.150.48 கோடியும், கல்வி வளர்ச்சிக்காக ரூ.270.00 கோடியும், வீட்டு கடனுதவிக்காக ரூ.272.00 கோடியும், புதுப்பிக்கத்தக்க சக்தி பயன்பாட்டு திட்டங்களுக்காக ரூ.25.34 கோடியும், ஏற்றுமதி திட்டங்களுக்காக ரூ.21.00 கோடியும், சமூக உள்கட்டமைப்பு திட்டங்களுக்காக ரூ.47.02 கோடியும், இதர முன்னோடி திட்டங்களுக்காக ரூ.224.05 கோடியும் ஆக மொத்தம் ரூ.3149.58 கோடி என இலக்கு நிர்ணையம் செய்யப்பட்டு வரைவு திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சார்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், வாலிநோக்கம் வங்கி கிளை வாடிக்கையாளர்கள் மூவரின் இறப்பிற்கான காப்பீட்டுத் தொகையாக அன்னாரது வாரிசுதாரர்கள், ஒரு நபருக்கு ரூ.4 இலட்சத்திற்கான காசோலையினையும், இரண்டு நபர்களுக்கு தலா ரூ.2 இலட்சத்திற்கான காசோலைகளையும் வழங்கினார்.

இக்கூட்டத்தில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மண்டல மேலாளர் திருமதி.உமா மகேஸ்வரி, நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் திரு.மதியழகன், முன்னோடி வங்கி மேலாளர் திரு.சுரேஸ்பாபு உட்பட LIC மற்றும் Universal Sompo Insurance Co Ltd பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**